**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>**

**<u>அ.வ.எண். 152/2015</u>**

இந்நீதிமன்றத்து பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமுலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2025 – ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23–** ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி – 23.07.2025**

**பெயர் – கன்னியம்மா**

**க/பெ – சீனிவாசன்**

**சாட்சி – PW1**

**விசாரணை தொடங்கும் நேரம்–** 01.13. p.m

**<u>குறுக்கு விசாரணை–</u>**

1. நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்குரையில் பிரமாணவாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் தெரியுமா என்றால் தெரியும். எதற்காக இவ்வழக்கு தாக்கல் செய்யபட்டது என்றால் பத்திரம் வேண்டி தாக்கல் செய்யப்பட்டது. எனது உடன் பிறந்தவர்கள் எத்தனை நபர்கள் என்றால் என்னுடன் சேர்ந்து 5 நபர்கள். இவ்வழக்கை எனது சகோதரரான குமார், அவரது மனைவி, மகள் மீது மட்டும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் மற்ற சகோதரர்கள் மீது தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2. நான், ரவி மற்றும் குமார் மட்டும் தான் உயிருடன் இருக்கிறோம் , எங்களை தவிர பிற சகோதரர்கள் தற்போது இறந்துவிட்டனர் என்றால் சரிதான். எந்த வருடம் எனக்கு திருமணம் நடைபெற்றது என்றால் சுமார் 26 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடைபெற்றது. ஸ்ரீனிவாசன் என்பவருடன் திருமணம் ஆகி திருப்பதியில் என்னை திருமணம் செய்து கொடுத்தார்கள்.

3. எனது கணவருக்கு திருப்பதியில் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறார். எனக்கு 2 மகன்கள் மற்றும் 1 மகள். எத்தனை வருடம் வரை எனது பிள்ளைகள் திருப்பதியில் படித்தனர் என்றால் 5–6 ம் வகுப்பு வரை அங்கு படித்தனர். எனது ஒரு மகனான வெங்கடேசன் என்பவர் எங்கு படித்தார் என்றால் பொன்னேரியில் படித்தார். எனக்கு ஆதார் அட்டை, குடும்ப அட்டை எந்த முகவரியில் உள்ளது என்றால் பொன்னேரியில் உள்ளது. மேலே கூறியுள்ள எனது ஆதார் அட்டை, குடும்ப அட்டை ஆகியவற்றை அடுத்த வாய்தாவிற்கு தாக்கல் செய்ய இயலுமா என்றால் இயலும்.

**( மேலும் குறுக்கு விசாரணை செய்ய வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது).**
**விசாரணை முடியும் நேரம். 01.23.p.m.**